# இரண்டு சாட்சிகள்

1

# THE TWO WITNESSES...



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# இரண்டு சாட்சிகள்



# வெளிப்படுத்தின விசேஷம் 11:3-13

***3.*** *என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ் சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்.*

***4.*** *பூலோகத்தின் ஆண்டவருக்குமுன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே.*

***5.*** *ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்;*

அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்பட வேண்டும்.

**6.** அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லிவருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

**7.** அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்.

*8.* அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்.

*9.* ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரைநாள் வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்.

*10.* அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக்

களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதி களை அனுப்புவார்கள்.

***11.*** மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்க ளுக்குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர் களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பய முண்டாயிற்று.

***12.*** இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார் கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர் களைப் பார்த்தார்கள்.

***13.*** அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது;

மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



# அது யாராயிருந்தது? சரியாக மோசேயும், எலியாவுமே. அவர்களே இரண்டு சாட்சிகளாயிருக்கிறார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 57-10-06 எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும் பாகம் #3

*714. இப்பொழுது இந்த யூதர்களுக்கு மூன்றரை வருடம் வாக்களிக்கப்பட்டிருக் கிறது. எத்தனை பேருக்கு அது தெரியும்? எழுபதாவது வாரம் வாக்களிக்கப்பட்டிருந் தது. அதில், "மேசியா வந்து அந்த வாரத் தின் மத்தியிலே சங்கரிக்கப்படுவார்" என்று கூறப்பட்டிருந்தது. மூன்றரை வருடங்கள் கிறிஸ்து பிரசங்கித்து, சரியாக மூன்றரை வருடத்தில், கொல்லப்பட்டார், மூன்று வரு டங்களும் ஆறு மாதமும் அவர் பிரசங் கித்தார்.*

*715. அதன் பின்னர் பாழாக்குகிற அருவருப்பு உண்டாகிறது, முகமதியரின்*

பள்ளி வாசலானது பரிசுத்த ஸ்தலத்தில் கட்டப்பட்டது, அது அங்கே நிற்கும் என்று தேவன் கூறினவிதமாகவே இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரே அது சம்ப வித்தது. தீர்க்கதரிசி அதைப் பார்த்தான், அதைக் கண்டான், "அவர்கள்... புறஜாதி யுகம் முடிவடையும் வரையில் அது புறஜாதி கள் அங்கே உடைமையாயிருப்பர்" என்று கூறினான்.

**716.** இப்பொழுது இன்னும் மூன்றரை வருடங்கள் வாக்களிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் கவனிப்பீர்களேயானால், வெளிப்படுத் தின விசேஷம் 11-ன் படியான இந்த சாட்சி கள் ஆயிரத்திருநூற்றறுபது நாட்கள் தீர்க்கதரி சனஞ்சொல்லுவார்கள்; சரியாக மூன்றரை வருடங்கள். இப்பொழுது அவர்கள் இரட்டு வஸ்திரமுடுத்தியிருந்தனர். இப்பொழுது அவர் களுடைய ஊழியத்தையும், அவர்கள் என்ன

வாயிருக்கிறார்கள் என்பதையும் கவனியுங்கள். இப்பொழுது, இந்த இரண்டு சாட்சிகளும் கொல்லப்படுகின்றனர்.

***717.*** இப்பொழுது... புறஜாதி சபையின் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குப் பிறகு அவர் கள் யூதரிடத்திற்குத் திரும்பினர். விவாகம் செய்து கொண்டபோது ரெபேக்காள் ஈசாக் கோடு ஆபிரகாமினுடைய ஸ்தலத்திற்குள் ளாக கொண்டு செல்லப்பட்டதுபோல், புறஜாதி சபையானது கலியாண விருந்திற்காக பரலோக வீட்டிற்குச் செல்கிறது. ரெபேக் காளும் ஈசாக்கும் ஆபிரகாமுக்கிருந்த முழு உடைமையோடும் வெளியே வந்தனர், அவையாவும் ஈசாக்கைச் சென்றடைந்தது. முற்றிலுமாக! ஈசாக்கு முதலில் விவாகம் செய்துகொள்ளும் வரையில் அது ஈசாக்கி னண்டை வர முடியவில்லை. ஓ அல்லே லூயா! அங்குதான் உங்கள் காரியமே உள்ளது.

*718.* கிறிஸ்து... தேவன் அந்த பரிபூரணத்தில் வாசம் செய்கிறார், அழிவுள்ள சரீரமானது முற்றிலுமாக என்றென்றைக்கும் நித்தியத்தினூடாக நிலைத்திருக்கும். ஆட்டுக்குட்டியானவரும் மணவாட்டியும் பரலோகத்தில் விவாகம் செய்துகொள்ள, அவளோ முழு சொந்தத்தில் வெளியே நடந்து வருகிறாள். முற்றிலுமாக! ஈசாக்கும் ரெபேக்காவும் முழு உடைமையில் புறப்பட்டு வந்தனர்.

*719.* இந்த விழா பரலோகத்தில் நடந்து கொண்டிருக்கையில், மணவாட்டி, புறஜாதி மணவாட்டி பிரபுவை (தேவனுடைய குமாரனை) மகிமையில் விவாகம் செய்து கொள்கிறாள்; அவர்கள் விவாகம் செய்து கொண்டு, அங்கே மூன்றரை வருடங்கள் நிகழ்கிற... மோசேயும், எலியாவும்...

*720.* மோசே ஒரு போதும் மறைந்து விடாமல்... இல்லை, அவனுடைய சரீரம்

தூக்கிச் செல்லப்பட்டது. தூதர்கள் அவனைக் கொண்டு சென்றனர், அவன் சரீரத்தில் அழிந்து போய்விடவில்லை, அவன் கிறிஸ்து வின் ஒரு பரிபூரண மாதிரியாயிருந்தான். அவன் மரித்தபோது, தூதர்கள் அவனைத் தூக்கிச் சென்றனர், அவன் எங்கே அடக்கம் பண்ணப்பட்டான் என்று பிசாசு கூட அறிந்திருக்கவில்லை. அவன் பிராதான தூத னாகிய மிகாவேலிடத்தில் அவனுடைய அடக்கத்தைக் குறித்து தர்க்கித்துப்பேச முயன்றான். அப்படித்தான் வேதம் உரைத் துள்ளது. தேவன் அவனை எடுத்துக் கொள் ளப்படுதலில் கொண்டு சென்றார்.

**721.** எலியா, ஒரு தேவனுடைய தீர்க்க தரிசி, அங்கே நடந்து சென்று கொண் டிருந்தபோது, யோர்தானண்டை நடந்து சென்று தன்னுடைய சால்வையை எடுத்து, தண்ணீரை அடித்தபோது, அந்தத் தண்ணீர் வலது, இடது பக்கமாகப் பிரிந்தது. அவன்

மலையின்மேல் ஏறிச் சென்றான். எலிசா கூறினான்... எலியா, "நீ எதற்காக என்னைப் பின் தொடர்ந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

*722.* அதற்கு அவன், "உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்க வேண்டும்" என்றான்.

*723.* அப்பொழுது எலியா, "நீ ஒரு அரிதான காரியத்தைக் கேட்டிருக்கிறாய், ஆனால் நான் எடுத்துக்கொள்ளப்படுகையில் நீ என்னைக் கண்டால் உனக்குக் கிடைக்கும்" என்றான். அவன் எலியாவை கவனித்துக் கொண்டேயிருந்தான்.

*724.* கொஞ்சங்கழித்து பரலோகத்திலிருந்து ஒரு அக்கினிரதமும், அக்கினிமயமான தூதர்களும், அக்கினிக் குதிரைகளும் இறங்கி வந்தது, எலியா அதில் ஏறி

மகிமைக்குள்ளாகச் சென்றான். அவன் மரணத்தை ஒரு போதும் ருசிபார்க்கவில்லை, அவன் எடுத்துக் கொள்ளப்பட்டான், அவன் மரிக்க வேண்டியதாயுள்ளதே!

**725.** வெளிப்படுத்தின விசேஷம் 11-ன் படியான இந்த இரண்டு தீர்க்கதரிசிகளையும் நீங்கள் கவனிப்பீர்களேயானால், மோசேயும் எலியாவும் செய்த அதேக் காரியத்தை அவர் கள் செய்கிறார்கள். நீங்களோ, “சகோதரன் பிரன்ஹாம் அவர்களே, அந்த எலியாவும், மோசேயும் இன்னமும் உயிரோடிருக்கிறார் கள் என்று எனக்கு பொருட்படுத்திக் கூறு கிறீரா?” என்று கேட்கலாம். முற்றிலுமாக!

**726.** ஏன்? மறுரூப மலைக்கு முன்பே... மறுரூபமலையிலே இயேசு கல்வாரிக்கு செல்லும் முன்னே, அங்கே மோசேயும், எலியாவும் அங்கே நின்று கொண்டு அவரி டத்தில் பேசிக்கொண்டிருந்தனர். நிச்சயமா

கவே அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர், அவர்கள் மரித்துப்போகவில்லை. அவர்கள் ஒருபோதும் மரித்துப் போயிருக்கவில்லை; அவர்கள் சாவுக்கேதுவானவர்கள், அவர்கள் மரிக்க வேண்டும். ஆகையால் அவர்கள் ஒரு மகிமையடைந்த நிலையில் அந்த நேரத்திற் காக காத்துக்கொண்டிருக்கின்றனர்.

**727.** ஆகையால் அவர்கள் திரும்பி வந்து சரியாக மூன்றரை வருடங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் கீழே பிரசங் கிக்கும்போது, புறஜாதிகளிடத்திலிருந்து ஆசீர் வாதங்கள் எடுக்கப்பட்டிருக்கும், (சபையா னது எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கும்); குளிர்ந்துபோன சம்பிரதாயமான சபையோ கம்யூனிஸ்டுகளினாலும், ரோம அரசாங்கத் தாலும் நாய்களைப் போல வேட்டை யாடப்படும், அவர்கள் வேட்டையாடப்படும் போது கொல்லப்படுவர். அப்பொழுது அவர் கள் கொல்லப்படுகின்றனர்; இந்தத் தீர்க்க

தரிசிகள் மூன்றரை வருடங்கள் பிரசங்கித்தப் பின்னர், அவர்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கொல்லப்பட்டனர், அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார். அது ஞானர்த்தமாய் சொல்லப்பட்டது, அது முன்னர் எருசலே மாயிருந்தது; பாருங்கள் முன்பு எருசலேம்.

728. அவர்கள் மூன்று இராப் பகல் வீதியிலே கிடந்தனர். அதன்பின்னர் மூன் றரை நாளைக்குப் பின்பு ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் எழும்பி நின்றனர். அவர்கள் மற்ற சாவுக்கேதுவானவர்களைப் போலவே மரிக்க வேண்டியதாயிருந்தது, அவர்கள் அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது. அவர்கள் இந்த இரண்டு பிரசங்கிமார்களைக் கொன்ற போது...

***729.*** *அவர்கள் தவறானதற்கு எதிராக பிரசங்கித்தனர், அவர்கள் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தனர். யார் அதைச் செய்தது? பார்த்தீர்களா? அவர்கள் வானத்தி லிருந்து வாதைகளைக் கொண்டுவந்து, தங்க ளுக்கு வேண்டும்போதான எந்த நேரத்தி லும்... அவ்வளவு துரிதமாக செய்து பூமியை வாதித்தனர். அவர்கள் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தனர். தங்களுக்கு வேண்டும்வரை மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைத்தனர். அது யாராயிருந் தது? சரியாக மோசேயும், எலியாவுமே. அவர்களே இரண்டு சாட்சிகளாயிருக்கிறார் கள்.*

***730.*** *அவர்கள் சபையை இல்லை உலகத்தை வேதனைப்படுத்தின போது, தங்களுடைய பிரசங்கத்தினால் யூதர்களை திரும்ப ஏற்றுக் கொள்ளச் செய்து, அவர் களை மனந்திரும்புதலுக்குக் கொண்டு வந்து,*

*அவர்களை திரும்ப விசுவாசிக்கும்படிக்கு கொண்டுவந்து... மணவாட்டிக்காக இயேசு வருவதை அவர்கள் காணும்போது, அவர்கள், "இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், அது அவரே!" என்று கூறுவர். ஆனால் அவர் அவர்களுக்காக வரவில்லை; அவர் தம்முடைய மணவாட்டிக்காக வருகிறார். அவருடைய மணவாட்டி...*

***731.*** *யோசேப்பு எகிப்திற்குச் சென்றபோது, அவன் தன்னுடைய சகோதர்களை தன்னோடு அழைத்துச் செல்லவில்லை, ஆனால் அவன் அங்கே தன்னுடைய மணவாட்டியை பெற்றுக்கொண்டான். முற்றிலுமாக! ஆனால் அவன் தன்னை தன்னுடைய சகோதரர்களுக்கு வெளிப்படுத்தினபோது, அப்போது அங்கே யாருமே இருக்கவில்லை. அது முற்றிலும் உண்மை. அவர் தம்மை*

இந்த யூதர்களுக்கு வெளிப்படுத்தும்போது, அப்பொழுது அங்கே யூதர்களைத் தவிர வேறுயாரும் இருக்கமாட்டார்கள். அங்கே யோசேப்பைக் கொன்றவர்கள் அங்கே நின்றனர்; அப்பொழுது அவனோ, “நான் தான் யோசேப்பு, உங்களுடைய சகோதரன்” என்றான். அவன் அழுதான்.

***732.*** அப்பொழுது அவர்களோ, “இப் பொழுது அதற்கான தண்டனை எங்களுக்கு உண்டு என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம், ஏனென்றால் நாங்கள் அவனைக் கொன்று போட்டோம்” என்றனர்.

***733.*** அதேக் காரியம், அந்த யூதர்கள் இப்பொழுது வருகைக்கு சற்று முன்னர் பெரிய இக்கட்டு காலத்தை உடையவர்க ளாயிருக்க, துன்புறுத்தலோ அவர்களை திரும்பவும் தாய் நாட்டிற்கு ஓடச் செய்யும். அது ஒரு கூட்ட ஆடுகளைத் திரும்ப

அப்பாலுள்ள கர்மேல் பர்வதத்திற்கு அவை களை விரட்டுகிறது போன்றதாயுள்ளது.

**734.** கர்த்தராகிய இயேசு தம்முடைய மணவாட்டிக்காக வரும்போது, அவர்கள் அவரைப் பார்ப்பார்கள், அப்பொழுது அவர் கள், "இவருக்காக காத்திருந்தோம், அதோ அவர் இருக்கிறாரே!" என்பார்கள். அவர் தம்முடைய ஆரோக்கியமான செட்டைக ளோடு எழும்புவார். அது உண்மை.

**735.** சபை, மீதமுள்ள யூதர்கள், அவர்கள் இந்த இரண்டு தீர்க்கதரிசிகளைக் கொல் லும்போது, அவர்கள் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும் சோதோம், எகிப்து என்ற வீதியில் கிடப்பர், அங்கே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார். அப்பொழுது அவர்கள் ஒருவருக்கொருவர் வெகுமதிகளை (உலகம் செய்கிறது போல) அனுப்புவார்கள்.




அவர்கள் ஆலயத் தொழுகையை
ஏற்படுத்திக் கொள்ளும் போது,
சபையானது இங்கிருந்து
போய்விட்டிருக்கும். தேவன் அப்பொழுது
யூதர்களோடு ஒரு தேசமாக இடைபட்டுக்
கொண்டிருப்பார்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 61-07-30E தானியேலை காபிரியேல் சந்தித்ததன் ஆறுவிதமான நோக்கங்கள் #2

*84. நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? பரலோகத்தில் இழுக்க உங்களுக்கு சக்தி யிருக்கிறதா?*

*நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம். அவர் எதைச் செய்ய வரப்போகிறார்? முதலாவதாக என்ன நடைபெறும்? இயேசு பூமிக்குத் திரும்ப வருவதற்கு முன்னர் முதலாவதாக நடைபெறும் காரியம் என்னவாயிருக்கும்?* **சபைக்கு என்ன நடக்கும்? அது எடுக்கப்பட்டுவிடும்.**

*இயேசு பூமிக்குத் திரும்பி வந்து, கல்லறைகளண்டையிலே சுற்றித் திரிந்து, அப்பா, அம்மாக்களோடு கை குலுக்கிவிட்டு, நம் யாவரோடும் பேசிக் கொண்டிருந்து*

*விட்டு, மேலே ஏறிப் போய்விடுவாரா? இல்லை.*

*அது எப்படியிருக்கும் "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது; கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் (2 தெசலோனிக்கேயர் 5-ம் அதிகாரம்) இந்த இடத்தில் (1 தெசலோனிக்கேயர் 4-ம் அதிகாரம் என்று தான் இருக்கவேண்டும் - தமிழாக்கியோன்)... "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை யடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை ..." (1 தெச 4:15). தேவ எக்காளம் தொனிக்கும். "...அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1 தெச 4:16). "பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக... அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு (1 தெச. 4:17) விடுவோம். "...ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழு*

*திலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்" (1. கொரி.15:51). அந்த வேளையிலே... அவ்வேளை தான் சபைக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறது.*

**பிறகு, இங்கே கீழே பூமியிலே தேவன் யூதர்களோடு இடைபட ஆரம்பிக்கிறார்.**

*85. அப்பொழுது அங்கே இரு தீர்க்கதரிசிகள் இருப்பார்கள். (11-ம் அதிகாரத்தில் (வெளி. 11-ம் அதிகாரம் - தமிழாக்கியோன்) அதை நாம் எடுத்துக் கொள்வோம்).*

*அவர்கள் இரண்டு அபிஷேகிக்கப்பட்ட தீர்க்கதரிசிகளாவர். அவர்கள் இருவரும் எலியாவும் மோசேயும் தான் என்றும் நான் கருதுகிறேன்.*

*அவர்கள் யாவரும் ஒருங்கிணைந்து கொண்ட பிறகு, ரோமாபுரியானது இஸ்ரவேலோடு உள்ள உடன்படிக்கையை எழுபதாவது வாரத்தின் மத்தியிலே முறித்துப் போட்டதை அவர்கள் (இரு தீர்க்கதரிசிகள் - தமிழாக்கி*

யோன்) காணும் போது, அப்பொழுது அவர்கள் மகா சாபங்களைக் கொண்டு வருவார்கள்.

உடன்படிக்கை முறித்தலானது வல்லமையை சிதறடிக்கும் அருவருப்பை உண்டாக்கும். புறஜாதியில் மீதியாயிருக்கும் நித்திரை செய்யும் கன்னியர் இருக்கும் பொழுது, பெரிய வெள்ளம் உண்டாகும். ரோமாபுரியாகிய வலுசர்ப்பம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும், மீதியாயிருக்கும் ஸ்திரீயின் வித்தோடு தன் வாயிலிருந்து நதி போன்ற வெள்ளத்தை ஊற்றிவிட்டு, யுத்தம் பண்ணப்போகும்.

**86.** அனைத்து சபைகளின் சமஷ்டி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அது அவர்கள் யாவரையும் ஒருங்கிணைத்து, யூதர்களையும் இந்த சபைகளின் சங்கத்தினுள், சமஷ்டிக்குள், கொண்டு வருவார்கள்.

அவர்களை அவர்களுடைய ஆலயத் தொழுகைக்கு வரும்படி செய்து, வேதத்திலிருந்து கர்த்தர் உரைப்பது என்னவென்றால் என்பதை மீண்டும் ஏற்படுத்துவார்கள். அவர்களுக்கு அவர்களுடைய சொந்த சபை உண்டாயிருக்கும்.

இப்பொழுது அவர்கள் என்னவாயிருக்கிறார்கள்? இப்பொழுது நான் புதியதாக தெரிந்து கொண்டேன்.

அவர்கள் இப்பொழுது ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அது சரிதானே? ஆனால் இன்னமும் அவர்களுக்கு ஆலயத் தொழுகை ஏற்படவில்லை.

**அவர்கள் ஆலயத் தொழுகையை ஏற்படுத்திக் கொள்ளும் போது, சபையானது இங்கிருந்து போய்விட்டிருக்கும்.**

தேவன் அப்பொழுது யூதர்களோடு ஒரு தேசமாக இடைபட்டுக் கொண்டிருப்பார்.

*பிறகு அவர்கள் இந்த சமஷ்டி அமைப் புக்குள் கொண்டு வரப்படுகையில், ரோமா புரியானது எழுபதாவது வாரத்தில் மீதி பாதி யில் அந்த மூன்றரை வருஷத்தில் அவர்க ளோடு உள்ள உடன்படிக்கையை முறித்துப் போடும்.*

*பின்பு பாழாக்கும் அருவருப்பை முடிவு பரியந்தமும் அவன் பரப்பிக் கொண்டே யிருப்பான்.*

**அப்பொழுது அவன் ப்ராடெஸ்டெண்டு கள், யூதர் ஆகிய இரு சாராரையுமே உபத்திரவப்படுத்துவான்; அவ்வேளையிலே இரண்டு தீர்க்கதரிசிகள் எழும்பி அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லி வரும் நாட்களிலே பூமியிலே மழை பெய்யாதபடி பூமியை சபிப்பார்கள்; இன்னும் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்தல் போன்றவை களையெல்லாம் அவர்கள் செய்வார்கள்.** *நீங்கள் சற்று பொறுத்திருங்கள். நாம் கற்றுக்*

*கொள்வதற்காக இங்கே ஏராளமான விஷயங்கள் வைக்கப்பட்டு இருந்து கொண்டிருக்கிறது.*

*87. ஓ, அவர் எவ்வளவு மகத்தான தேவனானவர் என்னே ஒரு இரக்கமுள்ள பிதா அவர்! சிநேகிதரே, உங்களுடைய மேய்ப்பன் என்ற முறையில் நான் இதைக் கூறுவேனாக.*

**நீங்கள் எப்படிப்பட்ட சிலாக்கியங்களுக்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணரவேயில்லை. நீங்கள் உணரவேயில்லை.**

**அநேக மகத்தான மனிதர்கள், அநேக பரிசுத்தவான்கள், ஆயிரக்கணக்கான பரிசுத்த மனிதர்கள், கடந்து போன அநேக ஆண்டுக் காலங்களில் மரித்துப்போய்விட்டனர். ஆவியால் நிரப்பட்ட அம்மனிதர்கள் நீங்கள் வாழ்கிற நாட்களைக் காண வேண்டுமென மிகவும் விரும்பியிருந்தார்கள்.**

நீங்களும் நானும் அதைப் பயன்படுத்திக் கொள்வோமாக.

இன்னும் எதை நாம் எதிர் நோக்கி இருக்க வேண்டியதிருக்கிறது? இதற்குப் பிறகு நம்மால் என்ன செய்ய முடியும்? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? என்ன சம்பவிக்கப் போகிறது. நாம் ஒரு இடத் திற்குப் போக வேண்டியவர்களாக இருக்கி றோம். இங்கே நிரந்தரமாக நீங்கள் தங்கி யிருக்க முடியாது. உங்களுடைய புல்லை நீங்கள் அறுக்கக்கூடும். அடுத்த வாரம் மீண்டும் புல்லையறுக்க வேண்டியது உள்ளது. அந்த நேரத்திற்கு இரு தடவைகள். நீங்கள் உங்கள் குழந்தைகளை வளர்க்கலாம். அவர்களுக்கு மதிய உணவு அளிக்கிறீர்கள். மீண்டும் இரவு உணவு வேளையில் அவர்க ளுக்கு பசி வந்துவிடுகிறது. இரவு உணவு அவர்களுக்குப் போஷிக்கிறீர்கள். மறுபடியும் அடுத்த நாள் காலையில் அவர்களுக்கு மீண்டும் பசி வந்துவிடுகிறது. ஒரு ஜோடு

பாதரட்சைகள் அவர்களுக்கு வாங்குகிறீர்கள்; என்னை போல் அவர்களுக்கு இருக்குமானால், இரண்டு மூன்று மாதங்களுக்குள் இன்னொரு ஜோடு செருப்புகள் வாங்குகிறீர்கள். ஒன்றிரண்டு மாதங்களில் மீண்டும் புதிய ஆடைகளை அவர்களுக்கு நீங்கள் வாங்க வேண்டியதாகிவிடுகிறது. ஒன்றும் நீடித்து இங்கே இருப்பதில்லை. ஒன்றும் நிரந்தரமானதாக இருக்கவில்லை. நிலைத்திருப்பது இங்கே ஒன்றுமில்லை.

விரைவில் கெட்டுப்போகும் இவ்வுலகின் மாயையான ஐசுவரியங்களை இச்சியாதீர்

ஒருக்காலும் ஒழிந்து போகாத நித்தியமானவைகளின் பேரில்

உங்கள் நம்பிக்கையைக் கட்டுவீர்

காலமானது விரைவான மாற்றங்களை கொண்டது.

பூமியில் யாவும் மாயை, அசையாதவைகள் நிலைக்குமே

நித்தியமானவைகளில் உங்கள் நம்பிக்கையை கட்டுவீர்

தேவனுடைய மாறாத கரத்தை பற்றிக் கொள்வீர்

தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்

நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டி

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்

தேளுங்கள்!

நாம் யாத்திரை முடியும்போது (அப்பொழுது அது முடிந்து விட்டது

*என்பதை அவர் நமக்குத் தெரியப்படுத்துவார்)*

*நாம் தேவனுக்கு உண்மையாயிருந்தால்*

*மகிமையில் நமக்கு அழகும் பிரகாசமுமான பரம வீடு உண்டே (அந்த அபிஷேகிக்கப்பட்ட நகரம்)*

*ஆனந்த பரவசமாக்கப்பட்ட நமது ஆத்துமா அதைக் காணுமே*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கையைக் கட்டி*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

இவ்வுலகின் வீணான செல்வங்கள் விரை வில் அழியுமே,

அவற்றின்மேல் இச்சை வைக்காதீர்

நித்தியமானவைகளிலே உம் நம்பிக்கை யைக் கட்டுவீர்

அவைகள் ஒருபோதும் ஒழிந்து போகாது.

தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்

நித்தியமானவைகளில் உம் நம்பிக்கை யைக் கட்டி

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்

நாம் தலைகள் வணங்கும் போது, நீங்கள் இதுவரையிலும் ஒருக்காலும் அவருடைய

*கரத்தை பற்றிக் கொள்ளாது இருப்பவராய் இருப்பீரானால், இப்பொழுதாகிலும் அதைச் செய்ய வரமாட்டீரா?*

*தேவனின் மாறாக் கரத்தைக் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கை யைக் கட்டி*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*88.* வாலிபப் பெண்களே, நீங்கள் இப் பொழுது அழகான இனிமையான பெண்க ளாக இருக்கிறீர்கள். உங்களுடைய தலைமுடி அழகாயுள்ளது; உங்கள் கன்னங்கள் ரோஜா மலர்களைப் போல் உள்ளது; ஆனால் நாளைய தினம் என்று ஒன்று உள்ளது;

அப்போது அவைகள் வாடிப்போகும். அடுத்த வாரத்தில் இந்த அழகான சிவப்புக் கன்னங்களை பூச்சி தின்று கொண்டிருக்காது என்று எப்படி நமக்குத் தெரியும்?

வாலிப சகோதரனே, நீ பெலமுள்ள வனாக இருக்கிறாய், பெரிய பெலமுள்ள தசைகள் உனக்கு உண்டு. உனக்கு பெரிய எதிர்பார்ப்புகள் உள்ளன. ஆனால் கொஞ்சக் காலத்திலே, நாளைக்கே, அவ்வழகான சுருள் முடிகளெல்லாம் விழுந்துவிடும். மீதமிருப்தோ நரைத்துவிடும். அப்பெரிய நிமிர்ந்த தோள் கள் எல்லாம் கூனிவிடும், கைகளில் உள்ள மாமிசத்தையோ பூச்சி தின்று கொண்டிருக் கும். அவைகள் உன்னை மண்ணுக்கு மண் ணாக ஆக்கிவிடும்.

நித்தியமானவைகளில் உம் நம்பிக்கை யைக் கட்டுவீர்

அவைகள் ஒருபோதும் ஒழிந்து போவ தில்லை

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்

(இப்பொழுது உம் கரத்தை நீட்டி அவர் கரத்தைப் பற்றிக் கொள்ளமாட்டீரா?)

நித்தியமானவைகளில் உம் நம்பிக்கை யைக் கட்டுவீர்

தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்

இவ்வுலக யாத்திரை முடிகையில்

(ஏதாவது ஒரு நாளிலே அது முடியும்)

தேவனுக்கு நீர் உண்மையாயிருந்தால்

*மகிமையில் நமக்கு அழகும், பிரசாகமு மான வீடுண்டே*

*ஆனந்த பரவசமாக்கப்பட்ட நமது ஆத்துமா அதைக் காணுமே!*

*(நீர் ஏன் அதை செய்யக்கூடாது?)*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*தேவனின் மாறாக் கரத்தைப் பற்றிக் கொள்வீர்*

*நித்தியமானவைகளில் உம் நம்பிக்கை யைக் கட்டி*

*தேவனின் மாறாக்கரத்தைப் பற்றிக் கொள்வீர்*




ஆனால் மகத்தான அற்புதங்களை எதிர்பார்க்காதீர்கள். மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைத்தல் போன்றவைகளை. அது யூதர்களுக்கு செல்லவிருக்கிறது
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

**Q.375. மணவாட்டி இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு பரிசுத்த ஆவியின் அசைவு இருந்து, அவளால் அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்படுமா? அல்லது அவருடைய பிரத்தியட்சமாகுதலுக்காக மட்டும் நாம் காத்திருக்கிறோமா?**

*310. இந்தக் கேள்வியுடன் நான் முடித்துக்கொள்ள வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். ஏனெனில் பதில் சொல்வதற்கு இன்னும் அநேக கேள்விகள் உள்ளன. அதிக நேரமாகிவிட்டது. இப்பொழுது நேரம் ஒரு மணிக்கு இருபது நிமிடங்கள். இங்கு இன்னும்*

முப்பது அல்லது ஒருவேளை நாற்பது கேள்விகள் கேட்கக்கூடும். எனக்கு உள்ள நேரத்தில் நான் இதற்கு சிறந்த முறையில் பதிலளிக்கிறேன். நான் மூன்று நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறேன். மற்ற கேள்விகளை என்னால் முடியும் போது எடுத்துக்கொள்கிறேன். பாருங்கள்? எப் பொழுது இவைகளை எடுத்துக்கொள்ள முடியுமென்று எனக்குத் தெரியவில்லை. என்னால் முடிந்தவரையில் அதை சிறப் பாக செய்வேன். நீங்கள் இவைகளை அனுபவித்து மகிழ்கின்றீர்களா? நான்... அது எனக்கும் உதவியாயுள்ளது. பாருங் கள்? இங்கு வந்து இக்கேள்விகளை முன்பு காணாமல் பொறுக்கி எடுக்கும் போது (பாருங்கள்?), உங்களால் பதில் கூற இயலாத சில கேள்விகள் கிடைத்து விடுகின்றன. நான் நம்பியிருந்தேன். நான் பொறுக்குவேன் என்று... சர்ப்பத்

தின் வித்தைக் குறித்த ஒரு கேள்வி இங்குள்ளது என்று எனக்குத் தெரியும். அதை எப்படியாவது பொறுக்கி எடுத்து அதை விவரிக்க வேண்டுமென்று விரும்பினேன். பாருங்கள்? அதை எடுக்கத் தவறிவிட்டேன், எனவே நான்... ஒருக்கால் அதை அந்த விதமாக செய்வது கர்த்தருக்குப் பிரியமில்லை போலும், அது சர்ப்பத்தின் வித்தின் பேரில், இந்த ஒலிநாடாவைக் கேட்கிறவர்கள் ஒருக்கால், "நல்லது, அவர் அதற்கு பதில் கூறாமல் விட்டு விட்டார்" என்று சொல்லாதபடிக்கு, அதற்காக எத்தனை பேர் இன்னும் இரண்டு நிமிடங்கள் சகித்துக் கொள்வீர்கள்? சரி.

**311.** இப்பொழுது பொறுங்கள், இதற்கு முதலாவதாக நான் பதில் கூறட்டும்.

இங்குள்ள கேள்வி இது: "மண வாட்டியினால் அற்புதங்கள் செய்யப் படுமா?"

ஆம், ஐயா. அது இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது. அது உண்மை. பாருங்கள்?

ஆனால் மகத்தான அற்புதங்களை எதிர்பார்க்காதீர்கள். மழை பெய்யாத படிக்கு வானத்தை அடைத்தல் போன் றவைகளை. அது யூதர்களுக்கு செல்ல விருக்கிறது. பாருங்கள்?

அது இங்கு சம்பந்தப்பட்டதல்ல; அது மோசேயும் எலியாவும் யூதர்களிடம் செல்லுதல், அது இந்த சபைக்கு அல்லவே அல்ல.

*நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முதல் மூன்று அதிகாரங்களைப் படியுங்கள். சபை என்னவென்று அங்கு புரிந்து கொள்வீர்கள். சபைக்கு அவ்வளவுதான். அது மணவாட்டியுடன் திரும்ப வரும்போது, அவள் திரும்ப வரும்போது... படியுங்கள்... சபையைக் குறித்து நீங்கள் அறியவேண்டுமானால், அதனுடன் சம்பந்தப்பட்டுள்ளது எதுவென்று, வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்களைப் படித்து விட்டு, அங்கிருந்து 19ம் அதிகாரத்துக்கு சென்று அதிலிருந்து தொடங்கி படியுங்கள், அங்கு நீங்கள் மணவாட்டியை காணலாம். மற்றது யூதரைக் குறித்தது.*

# வெளி.11:11-12ல் கூறப்பட்ட இரண்டு சாட்சிகள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-12-04 ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்

***176.*** *அடுத்த 'எடுத்துக்கொள்ளப்படுதல்' தெசலோனிக்கேயர் 4ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி, சபைக்கு - மணவாட்டிக்கு சம்பவிக்கும். மரித்தோர் உயிரோடெழுவார்கள். உயிரோடிருப்பவர் உயிர்த்தெழுந்தவர்களுடன் மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.*

*"...கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.*

*ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய*

சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

*1 தெச. 4:15-17*

**177.** அன்றொரு நாள் நான் இளைய மகன் ஜோசப்புடன் வீதியின் முனையில் நின்றுகொண்டு இராணுவத்தின்

நாளன்று நடைபெற்ற அணிவகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது முதலாம் உலக மகா யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட பீரங்கிகள் பவனி சென்றன.

அவைகளைத் தொடர்ந்து இரண்டாம் உலக மகா யுத்தத்தில் உபயோகித்த ஜெர்மன் பீரங்கிகளும், அவைகளுக்குப் பின்னால் இராணுவ வீரர்களும், தங்க நட்சத்திரப் பதக்கம் பெற்ற தாய்மார்களும் அணிவகுத்து சென்றனர்.

அப்பொழுது அலங்கரிக்கப்பட்ட வண்டி *(Float)* ஒன்று வந்தது.

அதன் முன்பாகத்தில் அறியப்படாத இராணுவ வீரனின் கல்லறை ஒன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

ஒருபுறம் ஒரு மாலுமியும், மறுபுறம் ஒரு இராணுவ வீரனும் அதனைக் காவல் காத்தனர்.

அந்த வண்டியின் மற்றொரு பாகத்தில் தங்க நட்சத்திரம் பதக்கம் பெற்ற ஒரு தாயார், யுத்தத்தில் மரித்துப் போன தன் மகனுக்காகத் துக்கிப்பது போலவும், ஒரு இளம் விதவை யுத்தத்தில் மரித்த தன் கணவனுக்காக மேசைமீது தலை வைத்து அழுது கொண்டிருப்பதையும் போலவும், அவளருகில் தகப்பனை இழந்த அவள் மகன் கண்கலங்கி நிற்பது போலவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

*என்னே பரிதாபம் என்று நான் நினைத்தேன்.*

*நான் கவனித்துக் கொண்டே இருக்கும்போது, ஊனமுற்ற வயது சென்ற இராணுவ வீரர்கள் பெருமையுடன் தங்கள் இராணுவ உடைகளைக் காண்பித்துக் கொண்டு அணிவகுத்து செல்வதைக் கண்டேன். அவர்கள் அமெரிக்கர்கள் என்பதில் பெருமை கொண்டனர்.*

*178.* **அப்பொழுது நான், "ஆண்டவரே, ஒரு நாள் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடெழுந்திருப்பார்கள். இது நிகழக்காத்துக் கொண்டிருந்த முன்பிருந்த சபை காலங்களின் பரிசுத்தவான்கள் உயிரோடெழுந்து தங்கள் கல்லறைகளை**

விட்டு வெளியே வருவார்கள். அப் பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர் களுடன் அணிவகுத்து ஆகாயத்துக் குள் செல்வோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீ ரத்திற்கு ஒப்பாக மறு ரூபப்படும்" என்று எண்ணிக் கொண்டேன்.

எடுத்துக் கொள்ளப்படுதலானது நம் முன்னிருக்கும் இந்நாட்களில் பரலோ கத்தை நோக்கிப் புறப்படும் அக்காட்சி எத்தகைய பவனியாயிருக்கும் என்பதை சிந்தனை செய்து பாருங்கள்.

ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்து வின் இரத்தம் தங்கள் மார்புகளில் பூசப்பட்டதையும், அவர்கள் காலத்து செய்திக்காக உண்மையாக வாழ்ந்த தையும் பெருமையாய் மற்றவர்களுக்குக் காண்பித்து அணிவகுத்து செல்வார்கள்.

**சகோதரனே, வரப்போகும் அந்த எடுத்துக் கொள்ளப்படுதலின் வேளைக் காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கி யிருக்கிறோம்.**

***179.*** *நாம் முடிக்கும் முன் இதை கவனியுங்கள். முதலாம் எடுத்துக் கொள் ளப்படுதல் நிகழ்ந்துவிட்டது. இரண்டா வது இப்போது நம் அருகில் உள்ளது.*

***180.*** *'எடுத்துக் கொள்ளப்படுதல்' மூன்றாம் முறை நிகழும். வெளி.**11:11-12**ல் கூறப்பட்ட இரண்டு சாட்சிகள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.*

*'மூன்றரை நாளைக்குப் பின்பு தேவ னிடத்திலிருந்து ஜீவ ஆவி அவர்களுக் குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர் கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களை*

பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டா யிற்று.

இங்கே ஏறி வாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார் கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர் களைப் பார்த்தார்கள்" வெளி. 11:11-12.

இவ்விரு சாட்சிகளும் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றவர்களாய் மறுபடியும் வந்து, யோசேப்பு தன் சகோதரருக்குச் சாட்சியாக இருந்தது போல, இவர்களும் யூதர்களுக்குச் சாட்சிகளாக இருப்பார் கள்.

அவர்களுடைய பிரேதங்கள் மூன் றரை நாட்கள் வீதிகளில் கிடக்கும்.

அதன்பின்பு ஜீவ ஆவி அவர்க ளுக்குள் பிரவேசித்து அவர்கள் பரலோ கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 'எடுத்துக் கொள்ளப்படுதல்' பழைய ஏற் பாட்டின் காலத்தில் மூன்று முறை நிகழ்ந்தது. புதிய ஏற்பாட்டின் காலத்தி லும் அது மூன்று முறை நிகழும்.

*181.* பரிசுத்தவான்களின் எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக நாம் காத்திருக்கி றோம்.

'எடுத்துக் கொள்ளப்படுதல்' நிகழும் என்று வேதாகமத்தில் உரைக்கப்பட் டுள்ளதால், அது நிகழும் என்பது உறுதி.



# அவர்கள் முடிவில், அந்த இரு தீர்க்கதரிசிகளையும் கொன்று விடுவார்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1211M பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

*111.* இப்பொழுது, *1914*-ல் உலகம் ஒரு யுத்தத்திற்கு சென்றது. அது முதற்கொண்டு அவர்கள் சமாதானமாயிருக்கவில்லை. தொடர்ச்சியாக அவர்கள் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இன்னமும் அவர் கள் அதே காரியத்தைத்தான் செய்து கொண் டிருக்கிறார்கள்? அத்தூதர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் "பிடித்துக் கொண்டிருந் தார்கள்" ஓ தேவனே, இரக்கமாயிரும்! நான் தரிசனத்தில் கண்ட அம்மகத்தானதை அவர் கள் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். (முழுவதும் அழிவுக்குள்ளாகின்றது). அது வந்து அழிக்கிற வரையிலும், அவர்கள் தங் களைத் தாங்களே அழித்துக் கொள்ளாத படிக்கும், இஸ்ரவேல் தன் சொந்த நாட்

டிற்குத் திரும்பிச் சென்று ஒருமித்து கூடுகிற வரையிலும், செய்தியானது இஸ்ரவேலுக்குச் சென்று, பரிசுத்த ஆவியாகிய முத்திரை யினால் அவர்கள் முத்திரையிடப்படுகிற வரையிலும், அணுகுண்டுகளையும், யுத்தங் களையும் அத்தூதர்கள் தடுத்து நிறுத்தி பிடித்துவைத்திருக்கிறார்கள். பாருங்கள், புற ஜாதியார் மத்தியிலிருந்து அவரது நாமத்திற் கென ஒரு கூட்டம் மக்கள் பிரித்தெடுக் கப்பட்ட பிறகு; இந்த காலத்தில்தான் அவர் கள் அழைக்கப்படுகிறார்கள். அதன் பிறகு, இஸ்ரவேல் மட்டுமே, மூன்று வருடங்கள் ஆறு மாதங்கள் அளவுக்கு செய்தியை பெறு கிறது.

*112.* தானியேல் அவ்வாறு உரைத்தான். அவர்கள் அவ்வாறு செய்வார்கள், அங்கே அது இருக்கும் என்றும் உரைத்திட்டான். அங்கே 70 வாரங்கள் இருந்தது. ஏழு ஆண்டுகள் யூதர்களுக்கான இரட்சிப்புக்காக விடப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருந்தது.

அந்த எழுபதாவது வாரத்தின் நடுவிலே அதிபதியாகிய மேசியா, அவர் தான் கிறிஸ்து, வந்திடுவார், அவர் அப்பொழுது சங்கரிக்கப்படுவார் என்று தானியேல் கூறி னான். இயேசு மூன்றரை யாண்டுகள் பிரசங் கத்தார். அதன்பிறகு அவர் சங்கரிக்கப்பட் டார். அன்றாட பலி அத்தோடு நிறுத்தப் பட்டது. அதை தானியேல் கூறியுள்ளான். சரி.

***113.*** அதன்பிறகு, ஒரு இடைப்பட்ட காலமானது புறஜாதியாருக்கு கொடுக்கப்பட் டது. அவர்கள் இந்த காலத்திற்குள் வருகி றார்கள். பிறகு, யூதர்களுக்கு இன்னும் மூன்றரை ஆண்டுகள் மீதியாக விடப்பட்டுள் ளது. வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரத்தை நாம் எடுத்துக்கொண்டால், நாம் அங்கே சரியாக முடிவு காலத்தைக் குறித்து தெளிவாகப் பார்க்கலாம். (சபையா னது வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரம் வரையிலும் தோன்றவேயில்லை).

அந்த முடிவின் கட்டத்தில் மோசேயும், எலியாவும் மீண்டும் தோன்றி, யூதர்களுக்கு பிரசங்கிக்கின்றனர். அந்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட இரு மனிதர்களோ, அல்லது சாட்சாத் அவர்கள் இருவருமோ வருவார்கள். அவர்கள் இருவரும் மரிக்கவில்லை. ஆகவே, அவர்கள் அவர்களை கொன்றுவிட, அவர்களது சரீரங்கள் சோதோம் என்னப்பட்ட தெருவில் கிடக்கும். அங்கே நமது கர்த்தரும் சிலுவையில் அறையப்பட்டார். அது எருசலேமாகும். மூன்று நாட்களுக்குப் பிறகு, ஜீவன், அதாவது ஜீவ ஆவியானது அவர்களுக்குள் வந்து, அவர்கள் உயிரோடெழும்பி, மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அப்பொழுது மூன்றிலொரு பங்கு பூமியானது வெடித்துச் சிதறியது. அவர்கள் யூதர்கள் மத்தியில் அற்புத அடையாளங்களைச் செய்கிறார்கள்.

***114.*** இதோ இங்கே இந்த யூதர்கள் இருக்கிறார்கள். இவர்களண்டைக்குத் தான்

*அவர்கள் இருவரும் பிரசங்கிக்க வருகிறார்கள். அந்த யூதர்கள் தங்கள் நாட்டிற்கு திரும்பி வருகிற வரையிலும், உலகத்தினால், அவர்களால் ஒருவரையொருவர் குண்டு வீசி அழித்து, அழிவைக் கொண்டு வர இயலாது; இங்கேயிருக்கிற வேதாகமம் அவ்வாறு கூறுகிறது: அவன் அந்த நான்கு தூதர்களையும் கண்டான். அவர்கள் என்ன பெறப்போகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் பெற்றது போலவே, யூதர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றாக வேண்டியதிருக்கிறது.*

***115.*** *வேதாகமத்தைப் படிக்கிற நாம் யாவரும், கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்த மனிதன் பரிசுத்த ஆவியானவர்தான் என்பதை உணர்ந்திருக்கிறோம். நல்லது, இங்கே அதே தூதன் தான் பரிசுத்த ஆவியோடு, அதாவது "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலோடு" மீண்டும் வருகிறார். எபேசியர் 4:30ல், பரிசுத்த ஆவியினால், மீட்கப்படும் நாள் வரையிலும் முத்திரை*

*யிடப்பட்டிருக்கிறதைப் பற்றி கூறப்பட்டுள் ளது.*

***116.*** *அந்த யூதர்கள் யாவரும் தங்கள் சுய தேசத்திற்கு திரும்பிப் போகிற வரையிலும் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. சில வாரங்களுக்கு முன்புதான். அவர்கள் யாவற் றையும் ஒன்று சேர்த்து அவர்களை வகைப் படுத்தி, ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு உறுப்பினராக ஆனார்கள். அது ஆயத்தமாக இருக்கிறது. நாம் முடிவுக் கட்டத்திற்கு வந்திருக்கிறோம். யாவும் முத்திரையிடப் பட்டு விட்டது இப்பொழுது.*

***117.*** *அவர்கள் யூதர்கள் தான் என்பதை இப்பொழுது நிரூபிக்கப்படுவதை கவனியுங் கள். நான் இப்பொழுது இந்த வசனத்தை எடுத்துக் கொள்ளப்போகிறேன்.*

நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமளவும் பூமி யையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்

படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

*வெளி. 7:3*

*118. இந்த வெளிப்பாடு சரியானது தான் என்பதை நிரூபிப்பதற்காக, நான்காம் வசனத்தை கவனியுங்கள்:*

முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்ட வர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்.

*வெளி. 7:4*

*119. "இஸ்ரவேலர்". அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் இப்பொழுது தான் கூடி வந்திருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் முத்திரையிடப்படும் நாளுக்காக ஆயத்த மாகக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். "யூதா கோத்திரத்தில் முத்திரை போடப்பட் டவர்கள் பன்னீராயிரம்; ரூபன் கோத்திரத் தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீரா*

*யிரம்; காத் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்; ஆசேர் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்; நப்தலி கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீரா யிரம்;. இவ்வாறு சிமியோன் முதல் பென்ய மீன் கோத்திரம் முடிய உள்ள 12 கோத்திரங்களும் முத்திரை போடப்பட்ட தைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. 12000-ஐ 12ஆல் பெருக்கினால் வருவது இலட்சத்து நாற்பத்து நாலாயிரம். அவர்கள் தான் அது.*

*120. 14ம் அதிகாரத்தில் இப்பொழுது பார்ப்பீர்களானால் ஒரு க்ஷணம் கவனி யுங்கள்.*

பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன்"

*வெளி. 14:1*

*121. "சீனாய் மலை" இங்கே ஆட்டுக் குட்டியானவர் எடுத்துக் கொள்ளப்படுதலை முடித்துவிட்டு திரும்பி வந்திருக்கிறார். அவர் திரும்பி வந்தபோது, அன்றிரவில் நாம் பார்த்தவிதமாக, யோசேப்பு புறஜாதிகள் யாவரையும் தன்னைவிட்டு அப்புறமாக அனுப்பிவிட்டு, தன் சகோதரருக்கு முன்பாக நின்று, "நான் தான் யோசேப்பு உங்கள் சகோதரன்" என்றான். அவர்கள் திகைப் படைந்தார்கள்.*

*122. சபைக்கால செய்தியில் நாம் கேட்டிருக்கிறதை நினைவில் கொள்ளுங்கள். அவர் எப்பொழுது திரும்பி வருவார்? அவருடைய கரங்களை குத்தியவர்கள் கூட பார்த்து, அவரிடம், "உம் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று" கேட்பார்கள் என்று பார்த்தோம்.*

*123. "என் சிநேகிதரின் வீட்டில் காயப்பட்டதினால் உண்டானவைகள்" என்று அவர் கூறினார். அவர்கள் புலம்பினார்கள். ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியே அழுது அழுது புலம்பினார்கள். ஏனெனில் அவர்கள், இந்த பொல்லாங்கை செய்தோமே என்று குத்தப்பட்டார்கள். அவர்களுடைய மேசியா தேவனேயாவார். யோசேப்பு தன் சகோ தரிடம், "நீங்கள் ஒருவருக்கொருவர் கோபப் படவேண்டாம். ஜீவனை உயிரோடே காக் கும்படி தேவனே இதைச் செய்தார்" என்று சொன்னது போல் தேவனும் யூதர்களிடம் அவ்வாறே கூறுவார்.*

*124. புறஜாதியாருக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும்படி, தேவன் யூதரின் கண்களைக் குருடாக்கினார் என்று வேதம் கூறுகிறது. நாம் தானே அதைப் பெறும்படி, அவரது நாமத்திற்கென ஒரு ஜனத்தை தெரிந்தெடுக்க, புறஜாதிகளிலிருந்து அவரது மணவாட்டியை பிரித்தெடுக்க, தேவன் இவ்வாறு செய்தார்.*

*ஓ, அது அழகாக இருக்கிறது. அவ்வாறில்லையா? நிச்சயமாக அவ்வாறே உள்ளது.*

*125. அங்கே தான் உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் உள்ளனர். மணவாட்டி இதற்குப்பிறகு தான் வருகிறாள் என்பதையும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் மணவாட்டியல்ல என்பதை காண்பிக்கவும், தொடர்ந்து வாசித்துக் கொண்டே போவோம். 7ம் அதிகாரம் 8ம் வசனத்திலிருந்து வாசிப்போம். 9ம் வசனத்திலிருந்து வாசிப்போம். ஏனெனில் 8ம் வசனத்தில் பென்யமீன் கோத்திரத்தார் 12000 பேர் முத்திரையிடப்பட்டதைக் குறித்து கூறப்பட்டுள்ளது.*

**இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்,** *(இங்கே தான் மணவாட்டி வருகிறாள்)* **வெள்ளை அங்கிகளைத்**

தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டி யானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண் டேன்.

அவர்கள் மகா சத்தமிட்டு, இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழ நின்று, சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு, ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென் என்றார்கள்.

அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள் என்று கேட்டான்.

அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர் கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள், இவர்கள் தங்கள் அங்கிகளை

ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர் கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத் திலே அவரைச் சேவிக்கிறார்கள்..." *(பார்த்தீர் களா?)*

*வெளி. 7:9-15.*

*126. உங்கள் மனைவி என்ன செய்கி றாள்? அவள் உங்களுக்கு வீட்டில் பணி விடைசெய்கிறாள். நீங்கள் அமர்ந்திருக்க அவள் உங்களுக்கு உணவு பரிமாறுகிறாள், உங்கள் ஆடைகளை ஆயத்தம் செய்து கொடுக்கிறாள். அவள் இரவும் பகலும் வீட்டில் பணியாற்றுகிறாள். மணவாட்டியா யிருக்கிற இவள், புறஜாதிகளின் யாவற்று ஜாதிகளிமிருந்து வந்தவர்களாவர்; இவர்கள்*

*தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக, அவரோடு இரவும் பகலும் இருந்து கொண் டிருக்கின்றனர். கடந்த இரவிலே, நாம் அதின் பேரில் என்ன பேசினோம் என்பதை யாவரும் நினைவில் வைத்திருக்கிறீர்களா?*

"சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர் களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

இவர்கள் இனி பசியடையவதுமில்லை; இனி தாகமடைவது மில்லை; வெயிலாவது உஷ்ண மாவது இவர்கள்மேல் படுவதுமில்லை.

சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக் குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்து வார்; தேவன் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்.

*வெளி. 7:15-17*

*127. இப்பொழுது, அங்கே உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேராகிய இஸ்ரவேலர் கர்த்தருடைய வருகைக்காக*

*காத்துக்கொண்டிருக்கிறார்கள். புறஜாதிகளின் நிறைவு உண்டாகிற வரையிலும் அவர்கள் உள்ளே போக முடியாது. புறஜாதிகள் காலம் முடிவடைந்தாக வேண்டும்.*

***128.*** *இப்பொழுது நான் ஒரு சிறிய என் சொந்த விஷயத்தை குறிப்பிடுவேன், அதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நம்பு கிறேன். ஸ்வீடனின் தலைநகராம் ஸ்டாக் ஹோமில் உள்ள பிலதெல்பியா சபைகளின் பொதுக் கண்காணிப்பாளர் லேவி பெத்ரஸ் என்பவர் இந்த யூதர்களுக்கு பத்து இலட்சம் பைபிள்களை, அதாவது சிறிய அளவில் உள்ள புதிய ஏற்பாடு புத்தகங்களை அனுப் பிக் கொடுத்தார். அதில் ஒரு பிரதி அவரிட மிருந்து எனக்கு ஒரு ஞாபகச் சின்னமாக அனுப்பப்பட்டிருந்தது. அவர்களுடைய மொழியானது எப்படிப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். யூதர்கள் பின்னால் இருந்து முன்னாக வாசித்துக் கொண்டு வருகிறவர்கள். அவர்கள் பாஷை அப்படி.*

அவர்கள் இப்புத்தகங்களை வாசித்து, "நல்லது, இந்த இயேசு தான் மேசியா வெனில், அவர் மரித்து, அவரது ஆவியானது ஆவியின் ரூபத்தில் வந்திருக்கிறது எனில், அவர் தீர்க்கதரிசிக்குரிய அடையாளத்தைச் செய்து காண்பிப்பதை நாங்கள் பார்க்கட்டும், அப்பொழுது நாங்கள் அவரை விசுவாசிப் போம்" என்று கூறினார்களாம்.

**129.** என்னே ஒரு பரிபூரணமான அமைப்பு இது! நான், "ஆண்டவரே, இதோ இப்பொழுதே வேளை வந்திருகிறது. இது தான் சமயம், இங்கே அது வந்திருக்கிறது" என்றேன். எனவே, நானும், பில்லியும், லாய்ஸும் விமானத்தில் பயணமானோம்.

**130.** நான் இந்தியாவுக்குள் சென்றேன், அங்கிருந்து நான் திரும்பப் பிரயாணமாகை யில், "அங்கே இறங்கி யூதர்களுக்கு செய்தியைப் பிரசங்கிப்பேன். 'இதோ இங்கே சத்தியம் இருக்கிறது' என்று அவர்களுக்கு எடுத்துக் காண்பிப்பேன்" என்று கூறினேன்.

*131.* யூதர்கள் எப்பொழுதும் தங்களு டைய தீர்க்கதரிசிகளை விசுவாசிப்பவர்கள். நாம் யாவரும் அதை அறிவோம். ஏனெனில் மேசியா ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார் என்று தேவன் அவர்களுக்கு உரைத்திருக் கிறார். அவர்கள் தங்களுடைய தீர்க்கதரிசி களை விசுவாசிக்கிறார்கள். "உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி" என்று தேவன் கூறினார். "அந்த தீர்க்கதரிசி சொல்லும் காரியம் நிறைவேறினால், அப்பொழுது அவனுக்கு செவிகொடுக்க வேண்டும், ஏனெனில் நான் அவனோடிருக்கிறேன். ஆனால் அவன் கூறிய வார்த்தை நிறைவேறாமற்போனால், அந்த தீர்க்கதரிசியை நம்ப வேண்டாம். ஏனெனில் நான் அவனோடு இருக்கவில்லை. ஆனால் அவன் கூறியது நிறைவேறினால், அப்பொ ழுது அவனுக்கு செவிகொடுங்கள். ஏனெனில் நானே அவனோடிருக்கிறேன்" என்று கூறியுள் ளார். யூதர்கள் அதை அறிவார்கள்.

*132. "ஓ என்னே! அது அற்புதமானதாய் இருக்காதா? நான் அவர்களில் நான்காயிரம் அல்லது ஐந்தாயிரம் பேர்களை வரவழைத்து, அங்கே நிற்கச் செய்திடுவேன், அவர்கள் வேதாகமத்தை வாசிக்கிறவர்களாக இருக்க வேண்டாம். 'இது மேசியாவானால், அவர் தீர்க்கதரிசியின் அடையாளத்தை செய்து காண்பிக்கட்டும்' என்று எனக்குள் எண்ணி னேன். எனது கையில் டிக்கெட் ஆயத்தமாக இருந்தது. அராபிய விமானக் கம்பெனியின் விமானத்தில் பயணம் செய்வதற்கு பயணம் செய்பவர்களை விமானத்திற்கு வரும்படி அழைத்து முடிக்க இன்னும் முப்பது நிமிடங் கள் இருந்தன. எனவே நான் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நின்றிருந்தேன். அப்பொழுது நான் எனக்குள், ஓ தேவனுக்கு ஸ்தோத்திரம், இன்னும் இரண்டு மணி நேரம். அப்பொழுது யூதர்கள் முழு நிச்சயத் தோடே பெந்தெகொஸ்தேயில் அவர்கள் பெற்றுக் கொண்டதைப் போல் இவர்களும் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள்" என்று*

எண்ணினேன்: மேலும், நான் எனக்குள், "நீங்கள் போய் ஒரு கூட்டம் ஜனங்களை அழைத்து வந்து, அவர் இன்னமும் மேசியா தானோ என்பதை காணும்படி செய்யுங்கள் என்பேன்" என்று எண்ணினேன். "உங்களுடைய முற்பிதாக்கள் எந்த அடிப்டையில் இந்த மேசியாவை புறக்கணித்தார்களோ, அதே அடிப்படையில் நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கரங்களை உயர்த்திடுங்கள்; இப்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வீர்கள்" என்று சொல்லுவேன் என்று நினைத்தேன். அப்பொழுது உலகில் அவர்கள் உள்ள பகுதியில் போய் அவர்கள் சுவிசேஷத்தை பரவச் செய்வார்கள். இந்த செய்தியை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பொழுது, தலைவர்களைப் பிடியுங்கள். அவர்களின் நாடித் துடிப்பாய் இருக்கின்ற தலைவர்களைத் தொடுங்கள். அவர்கள் இதை துவக்கட்டும்" என்று சொல்லுவேன் என்று நான் மேலும் நினைத்தேன்.

*133.* அப்பொழுது எனக்குள் ஏதோ ஒன்று, "இப்பொழுது போகாதே, வேளை யானது இன்னமும் வரவில்லை" என்று கூறி யது. பார்த்தீர்களா, புறஜாதிகளின் நாளானது இன்னமும் முடிவடையவில்லை, பாருங்கள்.

"ஓ, இது என்னுடைய எண்ணம்தான்" என்று அப்பொழுது தான் சிந்தித்தேன்.

*134.* நான் மீண்டும் புறப்பட்டேன், அப்பொழுது, என்னால் தாங்க முடியாத அளவுக்கு எனக்குள் ஒரு மோசமான நிலை ஏற்பட்டது. நான் விமானம் நிறுத்தி வைக்கும் ஷெட்டின் பின்பக்கமாகச் சென்று தலைவணங்கி, "பிதாவே, நீர் தான் என் னோடு பேசிக் கொண்டிருக்கிறீரா?" என்று ஜெபித்தேன்.

*135.* "இப்பொழுது இஸ்ரவேலுக்குப் போகாதே, வேளையானது இன்னும் வர வில்லை" என்று அவர் கூறினார். உடனே நான் உள்ளே போய், எனது டிக்கெட்டை

*மாற்றிக் கொண்டு, வேறு வழியாக போக பாதையை மாற்றினேன். வேளையானது இன்னமும் வரவில்லை என்பதை பாருங்கள்.*

***136.*** *ஆனால் இந்நாட்களில் ஒன்றில் செய்தியானது இஸ்ரவேலுக்குப் போகும். தேவன் அவர்களிடமாக மோசேயையும் எலி யாவையும், வெளிப்படுத்தின விசேஷம் **11**ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி அனுப்பிடுவார். அவர்கள் அற்புத அடையாளங்களைச் செய்து காட்டுவார்கள்; அது யேகோவாவின் அடையாளமாகும். அப்பொழுது புறஜாதி களின் காலமானது முடிவடைந்திருக்கும். புறஜாதி சபையைவிட்டு கிருபையானது அகன்று விட்டிருக்கும்; பெந்தெகொஸ்தே யுகமானது முடிவடைந்திருக்கும். ஸ்தாபனங் கள் தொடர்ந்து இருந்துகொண்டேயிருக்கும். ஏனெனில் அவர்கள் உறங்கும் கன்னியரோடு எழும்பி வருகிறார்கள்; நாம் சிறிது நேரத் திற்குள் அந்த விஷயத்திற்குள் செல்லுவோம்.*

ஆனால் அவர்கள் அந்த பிரிவில் தான் வருவார்கள்.

*137.* ஆனால் அவர்கள் அதைச் செய் யும்பொழுது, யூதர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவார்கள்; அவர்களுக்கு ஒரு எழுப்புதலுண்டாகி, அது மழை பெய் யாது வானத்தை அடைக்கும் காரியத்தைச் செய்யும். அவர்கள் எல்லாவிதமான அடை யாளங்களையும், அற்புதங்களையும் செய்வார் கள். இறுதியாக ரோமானிய குருக்களாட்சி யானது... கத்தோலிக்க சபையானது யூதர்க ளோடு செய்து கொண்டிருந்த உடன்படிக் கையை முறித்துக் கொண்டு விடுவார்கள். அப்பொழுது அங்கே... அவர்கள் தங்களுக் கிடையே செய்து கொண்ட ஒப்பந்தமானது... அவர் அங்கே செல்லுவார். தேவன் ஆதிநாட் களில் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்தது போல, நின்று அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். அவர்கள் முடிவில், அந்த இரு தீர்க்கதரிசிகளையும் கொன்று விடுவார்கள்.

அவர்கள் தெருவில் கிடப்பார்கள். அவர்கள்மேல் துப்புவார்கள்.

*138.* சில வாரங்களுக்கு முன்பாக, அங்கே அந்த பெந்தெகொஸ்தே ஊழியக்காரரையும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளையும் கொன்று போட்டது போல் நடக்கும். அப்பிள்ளைகளின் சிறிய வயிறு மிகவும் பெரிதாக உப்பிப்போயிற்று. மக்கள் அப்பிரேதங்களின் பக்கமாக நடந்து சென்று, அவர்கள் மேல் துப்பி, அவர்களது உடல்கள் அடக்கம் பண்ணப்படாமல், அப்படியே மூன்று அல்லது நான்கு நாளாக வெயிலில் கிடந்தன.

*139.* அதே காரியத்தையே அவர்கள் செய்வார்கள். வேதம் அவ்வாறு கூறுகிறது. அங்கே சரியாக இதே காரியத்தை அவர்கள் செய்வார்கள். அவர்கள் அவர்களைக் கொலை செய்யும்பொழுது, மூன்று நாட்கள் அவர்கள் பிரேதங்கள் வீதிகளில் கிடக்கும் பொழுது, ஜீவ ஆவி இரு தீர்க்கதரிசி

களுக்குள் பிரவேசித்து அவர்கள் எழுந்து நின்று, மகிமைக்குள் ஏறிச்செல்வார்கள். பிறகு, ஏறக்குறைய அதே வேளையில் தான் வெடி வெடிக்க ஆரம்பிக்கிறது. அதுதான் கடைசிநேரம். அப்பொழுதுதான் அவள் முடிந்து போவாள்.

***140.*** ஆனால் அது சம்பவிப்பதற்கு முன்பாக, புறஜாதிகள், தெரிந்துகொள்ளப் பட்ட மணவாட்டி... அங்கே உங்களில் சிலர், இக்காலையில் ஒன்றில் மேசையருகே அமர்ந்திருப்பீர்கள். அதில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார், இன்னொருவர் கைவிடப் படுவார். முடிவாக நீங்கள் அதிசயப்படு வீர்கள், "இது என்ன விஷயம்" என்று. ஒரு மோட்டார் வாகனத்தை உங்கள் மனைவி யோடோ அல்லது உங்கள் கணவனோடோ பேசிக்கொண்டே ஓட்டிக் கொண்டே சென்று கொண்டிருக்கக் கூடும், நீங்கள் கேட்பதற்கு அவர்கள் பதிலளிக்க மாட்டார் கள், ஏனெனில் அவர்கள் திடீரென அங்கு

இருக்க மாட்டார்கள். கல்லறைக்கு ஓடிச் செல்வீர்கள், சில கல்லறைகள் திறந்திருக்கும், வேறு சில இன்னமும் அப்படி மூடியே கிடக்கும். "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடைய வில்லை". அப்படியே ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அது அப்பொழுது முடி வடைந்திருக்கும்.

**141.** அது ஒரு இரகசிய வருகையாக இருக்கும், அது எப்பொழுது சம்பவிக்கப் போகிறது என்பதை ஒருவரும் அறியமாட் டார்கள். நாம் ஆயத்தமாகவும் விழிப்புட னும் இருக்கும்படி கட்டளையிடப்பட்டிருக் கிறோம். எந்த மணிவேளை என்பதை நாம் அறியோம். ஆனால் அது என்னவாயிருந்தா லும் சரி, கடந்த காலத்தில் மரித்தவர்களுக்கு நாம் முந்திக் கொள்வதில்லை. இயேசு தோன் றியதுமே, முழு ஜாமமும் விழித்தெழுகிறது. மரித்தவர்களோ, உயிரோடிருக்கிறவர்களோ, யாராயிருந்தாலும் சரி.

*142.* முதலில், நாம் அவரை சந்திப்ப தில்லை. நாம் ஒருவரையொருவர் முதலில் சந்திப்போம். வேதம் கூறுகிறது எபேசியர் 5ம் அதிகாரம் - "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை யடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை". தங்களுடைய சாட்சிகளை தங்களுடைய இரத்தத்தினால் முத்திரையிட்ட அந்த விலை யேறப்பெற்ற மக்கள். "நித்திரையடைந்தவர் களை நாம் முந்திக் கொள்வதில்லை. ஏனெனில்... எக்காளம் தொனிக்கும்" அப்பொழுது ஒன்று சம்பவிக்கும். "சுவிசேஷத்தின் ஏதோ ஒன்று தொனிக்கும்." அது தானே அவருடைய வருகையை அறிவித்தலாகும். "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள்." பின்பு உயிரோடிருக்கும் காத்திருக்கும் நாமும் மருரூப மடைவோம். ஒரு க்ஷணத்தில் ஒரு இமைப் பொழுதில், நாம் மறுரூபமடைவோம், சுருக்கங்கள் மறைந்து போகும். நரை மயிர் நீங்கிவிடும், ஒரு மாற்றம் ஏற்படுவதை நாம்

*நன்கு உணருவோம். நாம் நின்று கொண் டிருக்கையில், நமக்குப் பிரியமானவர்களை முதலில் நாம் சந்திப்போம். "அதோ அங்கே அம்மா இருக்கிறார்கள், அப்பா இருக்கிறார் கள், அதோ அங்கே என்று பிரிய சிநேகிதன் இருக்கிறான். ஓ, அல்லேலூயா, நாம் ஆயத்த மாக இருக்கிறோம்" என்று சொல்லுவோம். மரித்துயிர்த்து அவர்களோடுகூட நாம் ஆகா யத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, கர்த்தரை சந்திப்போம் என்று வேதவாக்கியம் கூறு கிறது. இதுவே வருகையின் ஒழுங்காகும்.*

***143.*** *ஓ, எனக்கு வயது சென்ற தந்தையை காண்பது எவ்வளவு நன்றாயிருக் கும்! ஓ, என்னே! விசுவாசத்தோடு மண்ணுக் குள் சென்ற நமக்கு மிகவும் பிரியமானவர் களை சந்திப்பது எவ்வளவு அருமையாயிருக் கும்! தேவனுடைய இனிமையைப் பாருங் கள். அவரை முதலில் நாம் சந்திப்போ மானால், "அம்மா அங்கே இருக்கிறார்களா, அம்மா கடைசியாக அதை அடைந்தார்களா?*

அவர்களுக்கு மிகவும் உறுதியாக பிரசங்கித்தோம், நாம் முயற்சி செய்தோம்; அவர்கள் இங்கு இருக்கிறார்களா? ஜா அங்கிள் இங்கு இருக்கிறார்களா? சகோதரன் இன்னார் இங்கு இருக்கிறாரா?" என்றெல்லாம் நாம் கேட்போம் என்று அவர் அறிந்தே இருக்கிறார். "கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம், உம்மை நேசிக்கிறோம், ஆனால்..." என்று கேட்போம். முதலாவதாக நாம் ஒருவரையொருவர் சந்திக்கப் போகிறோம். ஓ, ஓ, ஓ. அவர்கள் அங்கு இருக்கிறார்களா என்று நாம் வியக்கத் தேவையில்லை. நாம் யாவரும் அங்கே இருக்கிறோம்.

*144.* அவர்கள், "ஆமென், மகிமையும், ஞானமும், கனமும், வல்லமையும், பெலனும் உண்டாவதாக" என்று கூறியது ஆச்சரியமல்ல.

*145.* இருபத்து நான்கு மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை கழற்றி விட்டு, தரையிலே வணக்கமாய் விழுந்து, அவர்கள் யாவரும்

தரையிலே விழுந்து கிடந்து, அவரைத் தொழுது கொண்டனர்.

***146.*** இந்நாட்களில் ஒன்றில் நாம் பூமிக்கு அப்பால், பூமியின் வளையத்திற்கு அப்பால், எங்கோ ஆகாயத்தில் நிற்போம். அப்பொழுது நாம் இன்னமும் பரலோகத்தில் போய் விடமாட்டோம்; நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.

***147.*** ரெபெக்காள் விரைவாக தீர்மானித்தாள். தான் ஈசாக்கை சந்திக்க எலியேசருடன் ஒட்டகத்தின் மேலேறி செல்வோம் என்று அவள் தீர்மானித்தபொழுது, தனக்கு கணவனாக ஆகப்போகிற ஈசாக்கின் முகத்தை அவள் இதற்கு முன் பார்த்ததேயில்லை. ஆயினும் தேவன் அவளை அவனிடம் நடத்திக்கொண்டு இருந்தார். மாலையின் குளிர்ச்சியான வேளையில், ஈசாக்கு வயல் வெளிகளில் போவதற்காக போய்க் கொண்டிருந்தான். அது மாலை வேளையாயிருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தின் மேலேறி வந்து கொண்டிருக்கிறாள். எலி யேசர் அவளிடம், "இதோ அவர் வருகிறார்" என்று கூறினான். அப்பொழுது ரெபெக்காள் ஒட்டகத்தை விட்டிறங்கி, தன் முகத்தின் மேல் இருந்த முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டாள். அவள் இதற்குமுன் அவனைப் பார்த்ததே கிடையாது. அறிந்திருக்கவில்லை... அவன் தான் அவளுடைய கணவன் என்று, அவனை இதற்கு முன் பார்த்ததே கிடை யாது. அவள் அவனை விசுவாசத்தினால் சந்திக்க போவதாக இருந்தாள். (அவர் எப்படி தோற்றமளிப்பார் என்பதை நான் அறியேன், ஆனால், ஓ, அவரை நான் சந்திக்கும் பொழுது!) அவனை அங்கே வெளிகளில் அவள் சந்தித்தபொழுது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. அவனும் அவளை இதற்கு முன்பு கண்டதில்லை. அவன் கண்டபோது, அது கண்டதும் காதலாக மலர்ந்தது. இங்கே இவர்கள் ஒருவரையொருவர் வெளிகளிலே சந்திக்க

வருகிறார்கள். அவன் அவளைத் தன் தந்தையின் இராஜ்யத்தினுள் கொண்டு வந்து அவளை விவாகம் செய்து கொண்டாள்.

*148.* அதேவிதமாகத்தான், கர்த்தர் கீழே இறங்கி வருகிற வழியிலே, அவரை மத்திய ஆகாயத்திலே, சபையானது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு சந்திக்கும். ஓ, அது எப்பேர்ப்பட்ட உறவாக இருக்கும், கண்டதும் காதலாகத்தான் இருக்கும். நாம் பூமியின் வளையங்களிலே நின்று கொண்டிருக்கும் பொழுது, அந்த மீட்பின் பாடல்களைப் பாடும்போது, அது எப்படியாயிருக்கும்! ஓ, என்னே! எப்படியாய், நாம் நமக்கு அவர் அளித்த நம்மை மீட்கும் கிருபையைக் குறித்து, அவரைப்பாடித் துதிப்போம். பூமியின் வட்டத்தை, தலை வணங்கியவாறு, தூதர்கள் சுற்றி சூழ்ந்து கொண்டிருக்கையில், நாம் என்ன பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி அறியாமலிருப்பார்கள். அத் தூதர்கள் இழக்கப்படவில்லை. இரட்சிக்கப்

படுவது என்றால் என்ன என்பதை அத் தூதர்கள் அறிய மாட்டார்கள். நாம் தான் இழக்கப்பட்டோம். நாம் தான் அவ்வா றிருந்தோம். அப்பொழுது, எவ்வளவு பயங்கர மான காரியம் நமக்கு முன்பாக இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம், அவரோ நம்மை சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலும் இருந்து தம்முடைய இரத்தத்தினாலே மீட்டார். ஓ, அது எப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி கொண்டாடு தலான நாளாயிருக்கும்.

***149.*** நான் அப்பாடலை விரும்புகிறேன்.

*ஆகாயத்தில் ஆனந்த சந்திப்பொன் றுண்டு.*

*இனிமையாய், இனிமையாய், ஈற்றிலே*

*நான் வான்வெளிக்கப்பால் உள்ள வீட்டிலே*

உன்னை சந்தித்து வாழ்த்துவேன்.

அழிவுள்ளோர் காதுகளில் கேட்டிராத பேரின்ப கீதம் பாடுவோம்.

அது மகிமையாயிருக்கும், நான் அறி விக்கிறேன்,

தேவனுடைய சொந்தக் குமாரன் நடத் திச் செல்லுவார்

ஆகாயத்தில் நாம் அவரை சந்திக்கையில்.

முட்செடியருகே நின்ற மோசேயையும்

வீர தாவீதையும் அவன் கவணையும்

சொப்பனம் காணும் யோசேப்பையும்

குறித்து அறிந்துள்ளீர்.

தானியேலும் சிங்கக் கெபியையும் பற்றி எப்போதும் பாடுகிறோம்.

*ஓ, இன்னும் இவ்விதமான அநேகர் வேதத்திலுண்டு. அவர்கள் யாவரையும் காண நான் வாஞ்சிக்கிறேன் என்று அறிவிக்கிறேன் (அது சரிதான்)*

*அவர்களை சந்திப்பது எவ்வளவாய் ஆனந்தமாயிருக்கும்*

*அது ஆகாயத்தில் சந்திக்கும்போது நடக்கும்*

*(அந்நாளுக்காக காத்திருக்கிறேன்)*

***150.*** அதோ அங்கே உங்களுடைய இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள் வருகிறார்கள். அவர்கள் பிறகு சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வார்கள். புறஜாதிகள்மேல் ஒளியானது வீசிக்கொண்டிருக்கையில், அதே வேளையில் அவர்கள் ஏற்றுக்கொள்ள இய லாது. யூதர்கள் அதை மறுதலித்து மறைத் துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது, ஒளி

யானது... புறஜாதியார் எடுக்கப்பட்டபிறகு, ஆவியானவர் அவர்களுக்கு சாட்சி கொடுக்கும்படி இருவர்மேல் வருகிறார். அப்பொழுது யூதர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள்தான் அந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களாவர். அவர்கள் காணாமற்போன இஸ்ரவேல் வீட்டார். அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுவார்கள். அப்பொழுது மணவாட்டியானவள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருப்பாள்.

***151.*** அங்கே பத்து கன்னியர் காணப்படுகிறார்கள். நாம் மத்தேயு எழுதின சுவிசேஷம் ***21***ம் அதிகாரத்தை இப்பொழுதே எடுத்துக் கொள்வோம். பாருங்கள், நமக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. ஓ, நான் வேதாகமத்தை நேசிக்கிறேன்.

*எனது இளைப்பாறுதலை நான் பரலோகத்தில் எடுக்கையில்,*

*அது என்னே ஒரு அருமையான பயண மாயிருக்கும்!*

*அங்கே பரலோக இசைக்குழு இசைக்கும் பாடல்*

*இசையை நான் கேட்பேன்*

*எனது இரட்சகரின் முகத்தை நான் காண்பேன்.*

*நித்திய பசுமை மரத்தின் கீழ்*

*நதியின் கரையில் அமர்ந்து,*

*எனது இளைப்பாறுதலை பரலோகத்தில் கழிக்க நான் வாஞ்சிக்கிறேன்,*

*நீயும் உனதிளைப்பாறுதலை கழிக்க என்னுடன் வாராயோ?*



# இரண்டு சாட்சிகள்

1

# THE TWO WITNESSES...



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து